**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம்**
**சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்.**
**முன்னிலை:**திரு.A.பாலகிருஷ்ணன்,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, கோபிசெட்டிபாளையம்.
2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் நாள் செவ்வாய்கிழமை

**MOCP No.33/2019**

(CNR.No.TNED09-000903-2019)

நக்கீரன்
த/பெ.ஆறுமுகம் ... மனுதாரர்

/இடையே/

1.K.A.முருகேசன்
த/பெ.K.P.அய்யாவு
2.TVL S.N.A.ரோடுவேர்ஸ்,
கோபிசெட்டிபாளையம்.
3.கிளை மேலாளர்,
தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
கோபி டவுன், ஈரோடு ... எதிர்மனுதாரர்கள்

| | | |
|---|---|---|
| 1. | இழப்பீடு கோருபவரின் பெயர் மற்றும் முகவரி | நக்கீரன் (வயது 42/2017)<br>த/பெ.ஆறுமுகம்<br>கதவு எண்.19/9, கஸ்தூரிபாய் வீதி, கூகலூர், கோபி தாலூக்கா,<br>ஈரோடு மாவட்டம். |
| 2. | எதிர்மனுதாரரின் பெயர் மற்றும் முகவரி | 1.K.A.முருகேசன்<br>த/பெ.K.P.அய்யாவு<br>மாதேஸ்வரன் கோவில் வீதி,<br>கூகலூர், கோபி தாலூக்கா,<br>ஈரோடு மாவட்டம்.<br>2.TVL S.N.A.ரோடுவேர்ஸ்,<br>பிள்ளையார் கோவில் வீதி, கரட்டுர், புதுப்பாளையம், கோபி டவுன்,ஈரோடு மாவட்டம்.<br>3.கிளை மேலாளர்,<br>தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், |

| | | |
|---|---|---|
| | | கோபி டவுன், ஈரோடு மாவட்டம். |
| 3. | பெயர் மற்றும் காப்பீடு நிறுவனத்தின் முகவரி | தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், |
| 4. | மாநகர போக்குவரத்து கழகம் (அ) இதர இழப்பீடு தொகை செலுத்தத்தக்க எதிர்மனுதாரர் பெயர் மற்றும் முகவரி | இம்மனுவிற்கு பொருந்ததக்கதல்ல |
| 5. | இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் செய்த தேதி | 14.12.2017 |
| 6 | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி | 10.03.2026 |
| 7 | பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம் | ரூ.2,86,258/- |
| 8 | வட்டி விகிதம் | 7.5% |
| 9 | எந்த தேதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்பட வேண்டும் | 14.12.2017 |
| 10 | செலவுத்தொகை விபரம் ஏதாவது இருப்பின் | (ரூபாய் மதிப்பில்)<br>1.பிராசஸ் கட்டணம்: 09.00<br>2.ஆவணங்களின் மீதான முத்திரை கட்டணம்: 60.00<br>3.வக்காலத்திற்கான முத்திரை கட்டணம்: 10.00<br>4. நீதிமன்ற கட்டணம்: 2,235.00<br>5.வழக்கறிஞர் கட்டணம்: 8,725.00<br>6.தட்டச்சு கட்டணம்: 100.00<br>**மொத்தம் ரூ. 11,139.00** |
| 11 | உத்தரவின்படி இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுத்தொகையை யார் செலுத்த வேண்டும் என்பதை சம்பந்தமான விபரம் | 3-ம் எதிர்மனுதாரர் விபத்து நஷ்ட இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் மனுதாரரின் வங்கி கணக்கில் வைப்பீடு செய்ய வேண்டும். மேற்படி நஷ்ட ஈட்டு தொகையை மனுதாரருக்கு 3-ம் எதிர்மனுதாரர் செலுத்திவிட்டு |

| | | |
|---|---|---|
| | | அதனை 2–ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்து கொள்ள (Pay and Recovery) அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 12 | மனுவில் பல கோரிக்கையாளர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கோருரிமையருக்கும் இழப்பீட்டு தொகையில் கிடைக்கத்தக்க பாக விபரம் | பொருந்தத்தக்கதல்ல |
| 13 | இழப்பீட்டு தொகை எதன் மூலமாக, எந்த வகையில் செலுத்தப்பட வேண்டும் என்பது சம்பந்தமான விபரம் | இழப்பீட்டு தொகையை மனுதாரரின் வங்கி State Bank of India Kugalur Branch A/C No.34829474648 |
| 14 | இழப்பீட்டு தொகை கோருரிமையர் எவ்வாறு பெற்றுக் கொள்ளுவது என்பது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விபரம் | 3–ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை முழுவதையும் மனுதாரரின் வங்கி கணக்கில் வைப்பீடு செய்த பின்பு மனுதாரர் இழப்பீட்டு தொகையை உடனடியாக எடுத்துக்கொள்ள அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 15 | எந்த குறிப்பிட்ட காலத்திற்கு இழப்பீட்டு தொகைக்கான வட்டி கோருரிமையருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்ற விபரம் ஏதேனும் இருப்பின் | இல்லை |
| 16 | இதுவரை செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் | ரூ.1,100/– |
| 17 | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து இரு வாரங்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம் | ரூ.1,135/– |
| 18 | திருப்பி வழங்கத்தக்க கூடுதல் நீதிமன்ற கட்டணம் | இல்லை |

இம்மனுவானது கோபிசெட்டிபாளையம், மாண்புமிகு மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 14.12.2017–ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் மேற்படி மனு 09.01.2018–ம் தேதியில் MCOP No.06/2018, ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் ஈரோடு, மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதியின் செயல்முறை ஆணை A.No.134/2019 நாள்.07.09.2019-யின் படி, மேற்படி மனு இத்தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டு, இத்தீர்ப்பாயத்தில் MCOP No.33/2019 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, கடந்த 25.02.2026–ம் தேதியன்று என் முன்னர் விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.மகேந்திரன்,M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.K.ஆண்டவர்,M.Com.,B.L., அவர்கள் ஆஜராகியும் 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததாலும், இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், 2–ம் எதிர்மனுதாரரை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், 1,2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்தும், 3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.R.K.கோபாலகிருஷ்ணன்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் மற்றும் 3–ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும், இவ்வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இத்தீர்ப்பாயம் வழங்கிடும்,

## உத்தரவு

1. சாலை விபத்தில் காயமுற்ற மனுதாரருக்கு, 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் இழப்பீடாக ரூ.6,00,000/–மும், மேற்படி தொகைக்கு மனு தாக்கல் செய்த நாள் முதல், தொகை முழுவதும் செலுத்தும் நாள் வரையில் 12% ஆண்டு வட்டியும் மற்றும் செலவு தொகையும் செலுத்த உத்தரவிடக்கோரி, மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 166–ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் மனுவின் சுருக்கம்:–**

i) கடந்த 20.09.2016-ம் தேதியன்று இரவு 09.30 மணிக்கு மனுதாரரின் நண்பர் முருகேசன் உடன் TN-63-V-3242 என்ற ஆம்னி பேருந்தை ஓட்ட மனுதாரர் அந்த பேருந்தில் கூகலூரில் இருந்து கரூர் சென்று வரவேண்டி ஈரோட்டிலிருந்து கரூர் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நத்தமேடு பஸ் ஸ்டாப் அருகில் வளைவில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பேருந்தை 1-ம் எதிர்மனுதாரர் இயக்கி விபத்தை ஏற்படுத்திவிட்டார்.

ii) மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு வலதுகாலில் எலும்பு முறிவு, இடதுகாலில் பலத்த காயம் மற்றும் தலையில் பலத்த அடியும் ஏற்பட்டது. மனுதாரரை கரூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். மேற்படி விபத்து குறித்து கொடுத்த புகாரின் பேரில் விபத்துக்கு காரணமான TN–63–V–3242 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் ஓட்டுனர் மீது கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் குற்ற எண்:470/2016 இ.த.ச.பிரிவுகள்–279,337–ன்படி வழக்கு பதிவு செய்தனர்.

iii) மனுதாரர் மேற்படி விபத்திற்கு முன்பு ஓட்டுநராக வேலை செய்து மாதம் ரூ.18,000/– வருமானம் ஈட்டி வந்தார். தற்போது விபத்திற்கு முன்பு செய்து வந்த வேலையை செய்ய முடிவதில்லை.

iv) எனவே, மனுதார் மனுவில் கோரியுள்ள இழப்பீட்டு தொகையை 1,2எதிர்மனுதாரர்கள் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றும், ரூ.6,00,000/–த்தை இழப்பீடாக கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3.3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்

i) மனுதாரரின் மனு பொய்யானது. சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர் குறிப்பாக ஒப்புக் கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுகளைத் தவிர, மனுவில் கூறப்பட்டுள்ள மற்ற அனைத்து குற்றச்சாட்டுகளையும் மனுதாரரே தகுந்த ஆவணங்களுடன் நிரூபிக்க கடமைப்பட்டவர்.

ii) விபத்திற்கு முற்றிலும் மனுதாரரின் கவனக்குறைவே முக்கிய காரணம் ஆகும். விபத்து பதிவேட்டு நகல் மற்றும் காயச்சான்றில் தெளிவாக பேருந்தில் இருந்து தவறி கீழே விபந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து பதிவேட்டு நகலில், மனுதாரரின் மூச்சுக் காற்றில் ஆல்கஹால் வாடை இருந்ததாகவும், விபத்து சமயம் மனுதாரர் குடிபோதையில் இருந்ததால் நிலை தடுமாறி பேருந்தில் இருந்து கீழே விழுந்துவிட்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

iii) மனுதாரர் மேற்படி ஆம்னி பேருந்தின் பயணியோ, கிளீனரோ இல்லை. மேலும் மனுதாரர் ஆம்னி பேருந்தில் பயணம் செய்ததற்கு பயணச் சீட்டு எதுவும் பெறவில்லை. எனவே, விபத்திற்கு முற்றிலும் மனுதாரரே முழு காரணம். 1ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு காரணம் அல்ல.

iv) மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் முற்றிலும் தவறானவை. மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டு தொகைகள் அதிகம். எனவே, இம்மனுவினை 3–ம் எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. **<u>சாட்சியங்கள்:–</u>**

i) மனுதாரர் தரப்பில் மனுதாரர் திரு.நக்கீரன் என்பவர் ம.சா.1 ஆகவும், வேலாயுதபாளையம் காவல்நிலைய தலைமைக்காவலர் திரு.முருகேசன் என்பவர் ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்களும் நீ.ம.சா.ஆ.1–ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ii) 3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கோபி, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி.தெய்வநாயகி என்பவர் எ.மா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். 3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**6. தற்போது இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனைகள் யாதெனில், மனுதாரரின் இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதே ஆகும்.**

மனுதாரர் மனுவினை தீர்மானிப்பதற்கு கீழ்கண்டவற்றிற்கு தீர்வு காண்பது அவசியமாக உள்ளது.

| | |
|---|---|
| 1. | விபத்திற்கு TN–63–V–3242 என்ற வாகன ஓட்டுனரின் கவனக்குறைவும், அஜாக்கிரதையும் தான் காரணமா? |
| 2. | மனுதாரர் இழப்பீடு கோர உரிமை உடையவரா? |
| 3. | மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்களா? |
| 4. | மனுதாரருக்கு வழங்க வேண்டிய இழப்பீடு தொகை எவ்வளவு? |

என்பதேயாகும்.

**<u>7. பிரச்சனை எண்.1 பரிசீலனையும், தீர்வும்:–</u>**

| | |
|---|---|
| 1. | விபத்திற்கு TN–63–V–3242 என்ற வாகன ஓட்டுனரின் கவனக்குறைவும், அஜாக்கிரதையும் தான் காரணமா? |

**<u>தீர்வு:–</u>**

i) கடந்த 20.09.2016–ம் தேதியில் நடந்த விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரிவின் படி மனுதாரர் இழப்பீடு கோர வேண்டுமானால் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டவர்

ஆவார். மாண்புமிகு சென்னை உச்சநீதிமன்றம் Shriram General Insurance Company Ltd. Vs. S. Padmini 2014 2 TNMAC 521 என்ற முன்தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ii) மேற்படி முன்தீர்ப்பினை கவனத்துடன் பரிசீலனை செய்து பார்க்கும்போது, விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டவர் என்பது தெரிய வருகிறது. எனவே, இம்மனுவில் மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகன ஓட்டுனரின் கவனக்குறைவு, அஜாக்கிரதையை நிரூபித்துள்ளாரா? என பரிசீலனை செய்ய வேண்டியதாக உள்ளது.

iii) கடந்த 20.09.2016–ம் தேதியன்று இரவு 09.30 மணிக்கு மனுதாரரின் நண்பர் முருகேசன் உடன் TN–63–V–3242 என்ற ஆம்னி பேருந்தை ஓட்ட மனுதாரர் அந்த பேருந்தில் கூகலூரில் இருந்து கரூர் சென்று வரவேண்டி ஈரோட்டிலிருந்து கரூர் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நத்தமேடு பஸ் ஸ்டாப் அருகில் வளைவில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பேருந்தை 1–ம் எதிர்மனுதாரர் இயக்கி விபத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், மேற்படி வாகனமானது 3–ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது எனவும், TN–63–V–3242 என்ற வாகனத்தின் உரிமையாளர் 2–ம் எதிர்மனுதாரர் எனவும், மேற்படி வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் கவனக்குறைவினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

iv) மனுதாரர் தரப்பில் கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம், காவல் நிலைய குற்ற எண்:470/2016 முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி முதல் தகவல் அறிக்கையை பார்வையிடும்போது, அதில் TN–63–Y–3242 என்ற வாகன ஓட்டுனர் முருகேசன் என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

v) மனுதாரர் தரப்பில் வேலாயுதபாளையம் காவல்நிலைய தலைமைக்காவலர் முருகேசன் என்பவர் ம.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில், *"விபத்து சமயத்தின்போது முருகேசன் ஓட்டிச்சென்ற வாகனம் TN*–63–V–3242 *வாகனம் ஆகும். ஆனால் முதல் தகவல் அறிக்கை தயார் செய்த போது தட்டச்சு பிழையின் காரணமாக காலம் எண்.7லும், காலம் எண்.12–லும்* TN–63–Y–3242 *என்பதாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது'* என்று சாட்சியம் அளித்துள்ளார்.

vi) மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பார்வையிடும்போது. அதில் மேற்படி TN–63–V–3242 என்ற வாகனத்தின் உரிமையாளர் TVL S.N.A.Roadways(2–

ம் எதிர்மனுதாரர்) என்றும், வாகனத்தின் ஓட்டுநர் முருகேசன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வாகனமானது தி ஓரியன்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,(3–ம் எதிர்மனுதாரர்) காப்பீடு செய்துள்ளதாகவும் விபத்தின்போது வாகன காப்பீடு அமலில் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

vii) மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையை பார்வையிடும்போது, TN–63–V–3242 என்ற வாகனத்தை ஓட்டியவர் முருகேசன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

viii) மனுதாரர் தரப்பு ஆவணங்களை பார்வையிடுகையில், விபத்தானது TN–63–V–3242 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் நடைபெற்றதாக காவல்துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளார்கள். மேற்படி விபத்தை ஏற்படுத்திய முருகேசன் என்பவரை இவ்வழக்கில் 1–ம் எதிர்மனுதாரராக குறிப்பிடப்பட்ட நிலையில் மனுதாரரின் மனுவினை மறுத்து 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

ix) எனவே, மனுதாரர் தரப்பு சாட்சிய சான்றாவணங்களின் படி விபத்தானது 2–ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் கவனகுறைவு, அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டுள்ளது என்பது மனுதாரர் தரப்பில் சாத்தியக் கூறுகளின் மேம்பட்ட நிலை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

8. **<u>பிரச்சனை எண்.2,3 க்கான தீர்வு :–</u>**

| | |
|---|---|
| 2. | மனுதாரர் இழப்பீடு கோர உரிமை உடையவரா? |
| 3. | மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்களா? |

**தீர்வு:–**

i) கடந்த 20.09.2016–ம் தேதியன்று இரவு 09.30 மணிக்கு அவரது நண்பர் முருகேசன் உடன் TN–63–V–3242 என்ற ஆம்னி பேருந்தை ஓட்ட மனுதாரர் அந்த பேருந்தில் கூகலூரில் இருந்து கரூர் சென்று வரவேண்டி ஈரோட்டிலிருந்து கரூர் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நத்தமேடு பஸ் ஸ்டாப் அருகில் வளைவில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, மனுதாரர் மீது மோதியதில் மனுதாரருக்கு வலதுகாலில் எலும்பு முறிவு, இடதுகாலில் பலத்த காயம் மற்றும் தலையில் பலத்த அடியும் ஏற்பட்டதாகவும், மனுதாரரை கரூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.2 ஆக மாதிரி வரைபடம், ம.சா.ஆ.3 ஆக பார்வை மகஜர், ம.சா.ஆ.6 ஆக மருத்துவ விடுப்பு அறிக்கை, ம.சா.ஆ.7 ஆக மருத்துவ குறிப்புகள், ம.சா.ஆ.8 மருத்துவ பில்களும், ம.சா.ஆ.14 மற்றும் ம.சா.ஆ.15 ஆக காயச்சான்றிதழ்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

iii) ம.சா.1–ன் சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.2 முதல் ம.சா.ஆ.15 ஆகிய சான்றாவணங்களிலிருந்து மனுதாரர் சாலை விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார் என்பதும், மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகனமானது 3–ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் நிரூபணமாகிறது. மனுதாரர் விபத்தில் காயம்பட்ட நபர் என்பதால் இழப்பீடு கோர உரிமையுடையவர். இந்நிலையில் மனுதாரருக்கான இழப்பீட்டை 3–ம் எதிர்மனுதாரர் செலுத்த கடமைப்பட்டவரா? என்பதை காண வேண்டியுள்ளது.

iv) மனுதாரர் தரப்பில் விபத்து ஏற்படுத்திய TN–63–V–3242 என்ற வாகனம் 2–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், அந்த வாகனத்தை 3–ம் எதிர்மனுதாரர் நிறுவனம் 2–ம் எதிர்மனுதாரர் பெயரில் காப்பீடு செய்துள்ளதாகவும் மனுவில் கூறி அதன்படி ம.சா.1–ம் சாட்சியம் அளித்துள்ளார்.

v) 3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் Permit விதிமுறைகளை மீறி வாகனம் ஓட்டியதன் காரணமாக மனுதாரருக்கு நஷ்டஈட்டு தொகை கிடைக்கத்தக்கதல்ல என்று எதிர்வாதம் செய்யப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 ஆக கோபிசெட்டிபாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி.தெய்வநாயகி என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

vi) திருமதி.தெய்வநாயகி(எ.ம.சா.1) தன்னுடைய சாட்சியத்தில், "*விபத்துக்குட்பட்ட பேருந்து ஈரோடு மாவட்டம் மற்றும் திருச்செங்கோடு வட்டத்திற்குள் இயக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின்படி, 06.03.2012 முதல் 05.03.2017 வரை அனுமதி நடைமுறையில் இருந்தது. மேற்படி பேருந்து 20.09.2016ஆம் தேதியில் கரூர் மாவட்டம், வேலாயுதபாளையம் காவல்நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது. மேற்படி அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தை தவிர, மற்ற இடத்தில் பேருந்தை இயக்கினால் அது அனுமதி சீட்டின் நிபந்தனைகளுக்கு எதிரானதாகும்*" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

vii) எ.ம.சா.1–ன் சாட்சியத்தின்படி, TN–63–V–3242 என்ற பேருந்தானது ஈரோடு மாவட்டம் மற்றும் திருச்செங்கோடு வட்டத்திற்குள் ஓட்டுவதற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சம்பவ தினத்தன்று

மேற்படி பேருந்தானது கரூர் மாவட்ட எல்லைக்குள் நுழைந்து விபத்து ஏற்பட்டுள்ளது என்பது முதல் தகவல் அறிக்கையில் இருந்து தெரியவருகிறது.

viii) மனுதாரர் தரப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற The Chairman, M/s.IFET College of Engineering, TamilNadu Vs Arumugam & Others(CMA No.171/2016) என்ற முன்தீர்ப்பு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி முன்தீர்ப்பில் வாகனம் பழுதுநீக்குவதற்காக Permit violance மீறி இயக்கி இருந்தாலும் காப்பீட்டு நிறுவனம் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது என குறிப்பிட்டுள்ளது.

ix) இம்மனுவில் மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகனமானது பயணிகளுடன் பயணம் செய்யவில்லை. மனுதாரர் தரப்பு வாதுரையின்போது பழுதுநீக்குவதற்காக வாகனம் சென்றதாக வாதுரைக்கப்பட்டது. அதை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் எதனையும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே, இந்த விபத்து ஏற்பட்ட சமயத்தில் வாகன காப்பீடு நிலுவையில் இருந்து வருவதால் 3-ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கான நஷ்டஈட்டு தொகையை செலுத்திவிட்டு அதனை 2-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்து கொள்ளலாம் (Pay and Recovery) என மேற்கண்ட பிரச்சனைக்கு இத்தீர்ப்பாயம் தீர்வு காணுகிறது.

**<u>9) பிரச்சனை எண்.4 க்கான தீர்வு :</u>**

| | |
|---|---|
| 4. | மனுவின் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீடு எவ்வளவு? என்பதேயாகும். |

**தீர்வு:-**

i) விபத்தில் காயம்பட்ட நபர் இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்படும் மனுக்களில் எந்தெந்த தலைப்பின் கீழ் இழப்பீடு வழங்கலாம் என்பது குறித்து நமது மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 2010 (2) TNMAC 581 Rajkumar Vs Ajaykumar and another என்ற முன்தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேற்படி மாண்பமை உச்ச நீதிமன்ற முன்தீர்ப்பின் வழிகாட்டுதல் அடிப்படையில் மனுதாரருக்கு இழப்பீடு வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

A. **<u>வலி மற்றும் துன்பம்:-</u>**

மனுதாரருக்கு மேற்படி வீதம் ஏற்பட்ட காயங்கள் மற்றும் மருத்துவ சிகிச்சைகளை கருத்தில் கொண்டு வலி மற்றும் வேதனைக்காக ரூ.20,000/- வழங்கலாம் எனவும், விபத்து காயத்தினால் மனுதாரருக்கு ஏற்படும் சிரமத்தை கருத்தில் கொண்டு வசதி இழப்பிற்காக ரூ.5,000/- வழங்கலாம் எனவும் இத்தீர்ப்பாயம் கருதுகிறது.

B. **<u>வருமான இழப்பு:-</u>**

மனுதாரர் விபத்து சமயத்தில் ஓட்டுநராக வேலை செய்து வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இந்த விபத்தினால் மனுதாரருக்கு வருமான இழப்பு ஏற்பட்டதாக ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யப்படவில்லை. அவ்வகையில் மனுதாரருக்கு வருமான இழப்பு என்ற தலைப்பின் கீழ் நஷ்ட ஈட்டு தொகை எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று இத்தீர்ப்பாயம் கருதுகின்றது.

<u>C) **மருத்துவ செலவு:-**</u>

இந்த விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக மனுதாரர் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதற்கான மருத்துவ பில்கள் ம.சா.ஆ.8 ஆக மனுதாரர் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவ பில்கள் போலியானது என எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்திருப்பினும் அதுகுறித்து 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. அவ்வகையில் ம.சா.ஆ.8 மருத்துவ பில்களின் அடிப்படையில் மேற்படி மருத்துவ செலவிற்கான தொகை ரூ.1508.25/- மனுதாருக்கு கிடைக்கதக்கது ஆகும்.

<u>D) **நிரந்தர ஊனத்திற்காக:-**</u>

i) விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட நிரந்தர ஊனத்தை நிர்ணயம் செய்ய மனுதாரர் மருத்துவ குழுமம் முன்பு ஆஜராகி பெற்ற ஊனச் சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் மனுதாரருக்கு 50% ஊனம் ஏற்பட்டதாக மருத்துவ குழுமம் சான்றிதழ் வழங்கியுள்ளது தெரிய வருகிறது. மேற்படி ஊனம் வருவாயை இழக்க செய்யும் அளவிற்கு உள்ளது என்பது குறித்து மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சிய சான்றவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே மேற்படி ஊனம் வருவாயை இழக்க செய்யும் ஊனம் இல்லை என்று இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

ii) எனவே பெருக்கல் குறியீட்டின் அடிப்படையில் ஊனத்திற்கான இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. இந்நிலையில் Future General India Insurance vs Manivannan on 2024 (1) TN MAC 598 (DB) என்ற முன்தீர்ப்பு வழக்கில் மாண்பமை மேலமை நீதிமன்றம் பாரா 13 ல் பின்வருமாறு கூறியுள்ளது.

> *13.......This Court by judgment dated 09.01.2020 made in C.M.A.No.4870 of 2020 in the case of M/s IFFCO TOKIO General Insurance Company Limited vs. Venkatesh and another), fixed a sum of Rs.4,000/- per percentage of disability for the accident occurred in the year 2014 & 2015 and <u>a sum of Rs.5,000/- per percentage of disability for the accident occurred from the year</u>*

*2016 on wards, due to raise in cost of living. In the present case, the accident is of the year 2017. In view of the same, a sum of Rs.7,000/- is awarded per percentage of disability, due to a raise in cost of living......"*

மேலே சொல்லப்பட்ட முன்தீரப்பில் மாண்பமை நீதிமன்றமானது 2016–ம் வருடத்தில் ஏற்பட்ட விபத்திற்கு 1% மேலமை ஊனத்திற்கு ரூ.5,000/– வழங்கியுள்ளது. இந்த வழக்கு விபத்து ஏற்பட்டது. 2016ஆம் ஆண்டு என்பதை கருத்தில் கொண்டு 1% ஊனத்திற்கு ரூ.5,000/– அளிக்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதி அதன் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட 50% ஊனத்திற்காக 50x5,000 =ரூ.2,50,000/– ஊனத்திற்கான இழப்பீடாக வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

**E) உடனிருந்தோர் செலவு:–**

i) விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்காக வேண்டி மனுதாரர் கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 21.09.2016 முதல் 05.11.2016 வரையில் சிகிச்சை பெற்றுள்ளார் என்பது ம.சா.ஆ.6 ஆவணத்தின் வாயிலாக தெரியவருகிறது. எனவே, மேற்படி மனுதாரர் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற காலங்களில் மனுதாரரின் மருத்துவ தேவைக்காக வேண்டி ஒரு நபர் மனுதாரரை உடனிருந்து கவனித்திருக்க வேண்டும்.

ii) மனுதாரர் மருத்துவமனையில் உள்நோயளியாக கடந்த 21.09.2016 முதல் 05.11.2016 வரையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதை கருத்தில் கொண்டு உடனிருந்தோர் செலவுத் தொகையாக ரூ.3,750/– வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

**F) ஊட்டச்சத்து செலவு :–**

மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்காக அவர் தக்க ஊட்டச்சத்து ஆகாரங்களை உண்ண வேண்டியது அவசியமாக இருக்கும் அவ்வகையில் ஊட்டச்சத்து செலவிற்காக ரூ.5,000/–வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

**G) போக்குவரத்து செலவு:–**

போக்குவரத்து செலவு தொடர்பாக மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, மேற்கண்ட தலைப்பின் கீழ் மனுதாரருக்கு தொகை எதுவும் கிடைக்கதக்கதல்ல என்ற இத்தீர்ப்பாயம் கருதுகின்றது.

**H) ஆடை மற்றும் ஆபரணங்கள் செலவு:–**

விபத்தினால் மனுதாரர் அணிந்திருந்த ஆடைகள் சேதமடைந்திருக்கும் மேலும் மனுதாரர் மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்ற காரணத்தினால் அவரது உடைகளில் மருந்து கறைகள் படிந்து அதனால் அவரது ஆடை மற்றும் ஆபரணங்கள் சேதமடைந்திருக்கும்

எனவே, மேற்படி மனுதாரருக்கு ஆடை மற்றும் ஆபரணச் செலவிற்காக ரூ.1,000/– வழங்கலாம் எனவும் இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

- மேற்கண்ட விவாதங்களின்படி மனுதாரருக்கு கீழ்க்கண்ட இழப்பீடுகள் கிடைக்கக்கூடியது என்று தீர்ப்பாயம் கருதுகிறது.

| வ.எண். | இழப்பீடு தலைப்புகளில் | தொகை விபரம் (ரூபாயில்) | |
|---|---|---|---|
| 1. | வலி மற்றும் துன்பத்திற்காக | ரூ. | 25,000.00 |
| 2. | வருமான இழப்பிற்காக | ரூ. | 0.00 |
| 3. | மருத்துவ செலவு | ரூ. | 1,508.25 |
| 4. | நிரந்தர ஊனத்திற்காக | ரூ. | 2,50,000.00 |
| 5. | உடனிருந்தோர் செலவு | ரூ. | 3,750.00 |
| 6. | ஊட்டச்சத்து செலவு | ரூ. | 5,000.00 |
| 7. | போக்குவரத்து செலவு | ரூ. | 0.00 |
| 8. | ஆடை மற்றும் ஆபரணம் செலவு | ரூ. | 1,000.00 |
| | **மொத்தம்** | **ரூ.** | **2,86,258.25** |
| | **Rounded Off** | **ரூ.** | **2,86,258.00** |

மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.2,86,258/–ம் அதற்கு 7.5% வட்டி கிடைக்கத்தக்கது என்று இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. அவ்வாறே பிரச்சனை எண் 4–க்கு மேற்படி வீதம் தீர்வு காணப்படுகிறது.

10) **எனவே, முடிவாக** மனுதாரரின் மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு, 3–ம் எதிர்மனுதாரர் விபத்து நஷ்ட ஈட்டு தொகை ரூ.2,86,258/–ம் (ரூபாய் இரண்டு இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து இருநூற்று ஐம்பத்து எட்டு மட்டும்) மனுதாக்கல் தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரை ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டியுடன் (மனு தள்ளுபடியாகி இருப்பின் மேற்படிகாலம் நீங்கலாக) மற்றும் வழக்கு செலவு தொகையும் சேர்த்து மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. மேற்படி நஷ்ட ஈட்டு தொகையை மனுதாரருக்கு 3–ம் எதிர்மனுதாரர் செலுத்தி விட்டு அதனை 2–ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்து கொள்ள(Pay and Recovery) அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

ii) இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் 3–ம் எதிர்மனுதாரர், இம்மனுதாரரின் வங்கிக் கணக்கில் உத்தரவில் கூறப்பட்ட தொகையை NEFT அல்லது RTGS முறையில் நேரடியாக டெபாசிட் செய்ய வேண்டும் என்றும், அந்த வைப்பு விவரங்களையும் வங்கியின் ரசீது நகலுடன் இந்த தீர்ப்பாயத்திற்கும், மனுதாரருக்கும்

குறிப்பாணை வாயிலாக தெரிவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. தொகை செலுத்தப்பட்டவுடன் மேற்படி தொகையை மனுதாரர் பெற்றுக் கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது.

iii) மனுதாரர் பற்றாக்குறை நீதிமன்ற கட்டணம் ரூ.1,135/– இரண்டு வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் இவ்வுத்தரவு நிறைவேற்றுதற்குரியது அல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.8,725/– என நிர்ணயம் செய்யப்படுகிறது.

iv) 2020(4) CTC 272. M/s.சோழமண்டலம் MS ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் அய்யனார் மற்றும் பலர் என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புரையை பின்பற்றி இவ்வழக்கில் தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை. மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 168(2)ன் படி இந்த உத்தரவின் நகலை வழக்கு தரப்பினர்களுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

**மனுவின் Court Fee:–**

| | |
|---|---|
| இத்தீர்ப்பின் படி நீதிமன்ற கட்டணம் | ரூ.1,100.00 |
| மனுதாரரால் செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் | ரூ.2,235.00 |
| மனுதாரர் செலுத்தப்பட வேண்டிய நீதிமன்றக் கட்டணம் | ரூ.1,135.00 |

மனுதாரரின் வங்கி விவரங்கள்:–

| **வங்கியின் பெயர் மற்றும் கிளை** | **வங்கி கணக்கு எண்** | **IFCS எண்** | **PAN எண்** |
|---|---|---|---|
| State Bank of India Kugalur Branch | 34829474648 | SBIN0002226 | BEEPN9366R |

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாளாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

A BALAKRISHNAN Digitally signed by A BALAKRISHNAN Date: 2026.03.10 17:34:53 +0530

**மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயர் (சார்பு நீதிபதி)**
**கோபிசெட்டிபாளையம்.**

1. **<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:–</u>**

ம.சா.1 திரு.நக்கீரன்(மனுதாரர்)

ம.சா.2 திரு. முருகேசன்

**2.மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | --- | முதல் தகவல் அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | --- | மாதிரி வரைபடம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | --- | பார்வை மகஜர் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | --- | குற்ற இறுதி அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | --- | மனுதாரரின் ஓட்டுனர் உரிமம் | நகல் |
| ம.சா.ஆ.6 | --- | மருத்துவமனை விடுப்பு அறிக்கை | அசல் |
| ம.சா.ஆ.7 | --- | மருத்துவ குறிப்புகள் | அசல் |
| ம.சா.ஆ.8 | --- | மருத்துவமனை பில்கள் | அசல் |
| ம.சா.ஆ.9 | --- | வங்கி கணக்கு புத்தகம் | நகல் |
| ம.சா.ஆ.10 | --- | ஆதார் அட்டை | நகல் |
| ம.சா.ஆ.11 | --- | வருமானவரி நிரந்தர கணக்கு அட்டை | நகல் |
| ம.சா.ஆ.12 | --- | குடும்ப அட்டை | ஒப்பீட்டு நகல் |
| ம.சா.ஆ.13 | --- | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.14 | --- | காயச்சான்று | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.15 | --- | காயச்சான்று | சான்றிட்ட நகல் |

**3. நீதிமன்ற சான்றாவணம்:–**

| வ.எண். | தேதி | ஆவணம் | தன்மை |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | --- | மருத்துவகுழு வழங்கிய ஊனச்சான்றிதழ் | அசல் |

**4.3–ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:-**

எ.ம.சா.1 திருமதி.தெய்வநாயகி

**5) 3–ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–**

| வ.எண். | தேதி | ஆவணம் | தன்மை |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | --- | அனுமதி கடிதம் | அசல் |
| எ.ம.சா.ஆ.2 | --- | வாகனத்திற்கான அனுமதி சீட்டு | நகல் |

A BALAKRISHNAN Digitally signed by A BALAKRISHNAN
Date: 2026.03.10 17:35:16 +0530

**மோட்டார் வாகன விபத்து கோருரிமைத்**
**தீர்ப்பாயர் (சார்பு நீதிபதி)**
**கோபிசெட்டிபாளையம்.**